# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப, (ஓ),
*************

மனு எண் : 0003 / 2017 / ந

ஆணை எண் :086 / 2017

நாள் :04/05/2017

திரு.S.M.H.அப்துல் சலாம்,
5/16 A, சர்ச் எதிர்புறம்,
சேலம் கேம்ப்,
மேட்டூர் அணை – 636 456.
..... முறையீட்டு மனுதாரர்

திருமதி . பிரேமா,
உதவி பொறியாளர்,
மேட்டூர் நகராட்சி.
..... எதிர் மனுதாரர்

ஆணை :-

முறையீட்டு மனுதாரரது 05.01.2017 நாளிட்ட முறையீட்டு மனு 09.01.2017 அன்று இம்முறை மன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்:0003/2017 ஆக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர், எதிர் மனுதாரர் மீது கீழ்க்கண்ட தனது குற்றச்சாட்டுகளை தாக்கல் செய்துள்ளார்:-

"மேட்டூர் நகராட்சி, சேலம் கேம்ப் 5-வது வார்டில் அமைந்துள்ள நகராட்சி மகப்பேறு மருத்துவமனையை ரூ.2.50 லட்சம் மதிப்பீட்டில் மராமத்துப் பணிகள் செய்வதற்காக ஒப்பந்ததாரர் திரு.M.ராமசாமி அவர்களுக்கு 30.01.2014 ம் தேதி நகர்மன்றம் அனுமதி வழங்கி இன்று வரை பராமரிப்பு பணிகள் ஏதும் நடைபெறாத நிலையில், செய்யாத வேலைக்கு பொய்யாக அளவு புத்தகத்தில் (M.BOOK) எழுதி ஒப்பந்ததாரர் திரு.M.ராமசாமிக்கு நகராட்சி உதவி பொறியாளர்

திருமதி. பிரேமா, உதவிப் பொறியாளர் அவர்கள் வேலைக்கான பில் தொகையை முறைகேடாக வழங்கி ஊழல் புரிந்துள்ளார்" என்பதாகும்.

முறையீட்டு மனுதாரர் இதே புகாரினை குறிப்பிட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு முகவரியிட்ட 21.07.2016 நாளிட்ட கடித நகலொன்றினையும், மேட்டூர் நகராட்சியின் கோப்பு ந.க.எண்:6232/2006/அ3 மற்றும் ந.க.எண்:2473/2015/இ1 ன் அலுவலக குறிப்புகள் என்பதன் நகலினையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார். மேற்படி அலுவலக குறிப்புகளை பரிசீலித்ததில் கீழ்க்கண்டுள்ள விவரங்கள் தெரியவந்தன.

i.( ந.க.எண்:6232/2006/அ3)

வார்டு எண் 5ல் உள்ள மகப்பேறு மருத்துவமனையில் தளவாட பொருட்கள் (Essential Equipments) பொருத்துதல் பணிக்கு ரூ.2 லட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் 07.07.2015 அன்று வரப்பெற்று நகர்மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்பட்டது.

ii.( ந.க.எண்:2473/2015/இ1)

வார்டு எண் 5ல் உள்ள மகப்பேறு மருத்துவமனையில் பழுதினை சரிபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிக்கு ரூ.8 லட்சம் மதிப்பீட்டில், ஒப்பந்தப்புள்ளிகள் 07.07.2015 அன்று வரப்பெற்று நகர்மன்ற முடிவிற்கு வைக்கப்பட்டது.

முறையீட்டு மனுவின் மீதான பதிலறிக்கையினை அனுப்பி வைக்குமாறு எதிர்மனுதாரரான உதவிப் பொறியாளருக்கும், மேட்டூர் நகராட்சி ஆணையருக்கும் இம்முறை மன்ற நடுவ அறிவிப்பாணை எண்.0003/2017 நாள் 11.01.2017 ன் படி ஆணையிடப்பட்டது. மேலும், 02.03.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கங்கள் அளிக்குமாறு முறையீட்டு மனுதாரருக்கு அழைப்பாணையும் (அசல் மனு எண்:0003/2017/ந. நாள் 18.01.2017) அனுப்பி வைக்கப்பட்டது. அதன்படி 02.03.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்ட புகாரினை மீள வலியுறுத்தினார். மேலும், முதலில் உதவிப் பொறியாளர் பொறுப்பிலிருந்த திரு.ஷாதிக் அலி என்பவர் புகாரில் குறிப்பிட்ட பணிகள் நடைபெறாமல் இருந்ததால் பணம் பட்டுவாடா செய்யவில்லை எனவும் அதற்கு பின்பு உதவிப் பொறியாளராக உள்ள திருமதி.பிரேமா/ என்பவர் மேற்படி வேலையே செய்யாத நிலையில் ஒப்பந்ததாரருக்கு பணம் பட்டுவாடா செய்துள்ளார் எனவும் தனது வாக்குமூலத்தில் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், எதிர்மனுதாரரது 22.02.2017 நாளிட்ட விளக்கங்களுடன் கூடிய மேட்டூர் நகராட்சி ஆணையரது விரிவான அறிக்கை (ந.க.எண்:250/2017இ1 நாள்:27.02.2017) தொடர்புடைய

ஆவண நகல்களுடன் வரப்பெற்றது. மேற்படி அறிக்கை, எதிர்மனுதாரரது விளக்கங்கள் மற்றும் ஆவணங்கள் இம்மறை மன்ற நடுவத்தால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர் திரு.எம்.ராமசாமி என்பவருக்கு ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில், நகர்மன்ற தீர்மான எண்:58 நாள்:30.01.2014ன் படி அங்கீகரிக்கப்பட்டவாறு ரூ.2.50 லட்சம் மதிப்பீட்டிற்கான மராமத்துப் பணிகள் பொது நிதியின் கீழ் மேட்டூர் நகராட்சியால் அளிக்கப்பட்டுள்ளன. மேற்படி பணிகளுக்கான அளவீடுகள், மேல் அளவீடுகள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர் சான்றுகளுடன் கூடிய ஆவண நகல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள மற்றொரு ஒப்பந்ததாரர் திரு.M.P.P&CO என்பவருக்கு நகராட்சி மருத்துவமனை மராமத்து பணிகள் (ரூ.8.00 லட்சம் மதிப்பீடு) 13.08.2015 நாளைய நகர்மன்ற அனுமதியுடன்படி (தீர்மான எண்:231) ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், அதே ஒப்பந்ததாரருக்கு, ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் நகர்மன்ற தீர்மான எண்:157 நாள்:29.05.2015 மற்றும் எண்:230 நாள்:13.08.2015 ன்படி ரூ.2 லட்சம் மதிப்பீட்டிலான பிறிதொரு பணி (Auto Analyser Semi Type Remi Automatic விநியோகம் செய்தல்) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்விரு பணிகளும் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து துறையினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து (ரூ.10 லட்சம்) மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், இப்பணிகள் முடிக்கப்பட்டமைக்கான தொழில் நுட்ப அலுவலர்கள் அளவீடுகள், மேல் அளவீடுகள் மற்றும் நகர்நல மருத்துவரிடம் ஒப்படைக்கப்பட்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

எனவே, மேற்குறிப்பிட்ட ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் நகர்மன்ற தீர்மானங்களின்படி திரு.எம்.இராமசாமி எனும் ஒப்பந்ததாரருக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளும், இரண்டாவது ஒப்பந்ததாரரான திருவாளர் M.P.P&CO எனும் நிறுவனத்தாருக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளும் வெவ்வேறானவை என விவரிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மனுதாரர் கூற்றான முதல் ஒப்பந்ததாரர் திரு.எம்.இராமசாமி என்பவர் செய்து முடிக்காத மராமத்துப் பணிகள் பிறிதொரு ஒப்பந்ததாரரான திருவாளர் M.P.P&CO எனும் நிறுவனத்தால் செய்யப்பட்டது என்ற கூற்று நிரூபணம் ஆகவில்லை. மேலும், எதிர்மனுதாரரான நகராட்சி உதவி பொறியாளரது விளக்கங்களிலும் மேற்படி இரு ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட பணிகளும் வெவ்வேறானவை எனவும் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை எனவும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது. மேட்டூர் நகராட்சி ஆணையரது அறிக்கையிலும் இந்நிலை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அனைத்துப் பணிகள் தொடர்பாக, நகர்மன்ற தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்ட கால கட்டங்களில் மனுதாரரின் மனைவி திருமதி.ஜீனத்துல் அஸ்மா க/பெ. அப்துல் சலாம் என்பவரே 5 வது

வார்டின் நகர்மன்ற உறுப்பினராக இருந்து மேற்படி தீர்மானங்களையும் ஆதரித்துள்ளார் என்ற விவரங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவர் நகர் மன்ற உறுப்பினராக இருந்த காலங்களில் இது குறித்து நகர்மன்றத்தில் விவாதிக்காமல் இவரது பதவிக்காலம் முடிவடைந்த பின்னரே அவரது கணவர் (முறையீட்டு மனுதாரர்) 27.12.2016ல் இம்முறை மன்ற நடுவத்திற்கு புகார் மனு அனுப்பியுள்ளார் என்பதும் ஆவணங்களின் அடிப்படையில் நிரூபணமாகிறது.

அவ்வாறிருப்பினும், எதிர்மனுதாரர் திருமதி . பிரேமா, உதவி பொறியாளர், மேட்டூர் நகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர் 18.04.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கங்கள் அளிக்குமாறு இம்முறை மன்ற நடுவ முறையீட்டு மனு எண்:0003/2017/ந நாள்:09.03.2017 ன்படி ஆணையிடப்பட்டது. மனுதாரர் மேற்படி உதவி பொறியாளருக்கு முன்னர் அந்த பதவியிடத்திலிருந்த திரு. ஷாதிக் அலி (தற்போது கரூர் நகராட்சியில் பணிபுரிபவர்) என்பவர், ஒப்பந்ததாரர் திரு.எம்.இராமசாமி என்பவரது பணிகள் முடிவடையாததால் பட்டியல் தொகையினை வழங்கவில்லை எனவும் எதிர்மனுதாரர் பதவியேற்றபின்பு செய்யாத பணிக்கு பட்டியல் தொகை வழங்கப்பட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். எனவே, மேட்டூர் நகராட்சியின் முன்னாள் உதவி பொறியாளர் திரு.ஷாதிக் அலி என்பவரையும் விசாரணைக்கு ஆஜராக இம்முறை மன்ற நடுவத்தால் ஆணையிடப்பட்டது.

அதன்படி 18.04.2017அன்று விசாரணைக்கு ஆஜரான மூன்று அலுவலர்களும் மேற்படி ஒப்பந்தப் பணிகள் அனைத்தும் வெவ்வேறானவை எனவும் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன என்றும் அளவீடுகள், மேல் அளவீடுகள், பதிவேடுகளில் உரிய பதிவுகள் மற்றும் துறை ஒப்புதல்கள் பெறப்பட்டுள்ளன என உறுதி செய்துள்ளனர். மேலும், இது குறித்து உள்ளாட்சி நிதி தணிக்கையிலும் குறிப்பு / தடை ஏதும் எழுப்பப்படவில்லை எனவும் குறிப்பிட்டு வாக்குமூலங்களை சமர்ப்பித்துள்ளனர்.

மனுதாரர் மற்றும் அவரது துணைவியார் ஆகிய இருவரில் ஒருவர் தொடர்ந்து நகர் மன்ற உறுப்பினராக இருந்து வந்துள்ளனரெனவும் நகராட்சிக்கு சொந்தமான சாலையை அவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளனரெனவும் அதனை அகற்ற செல்லும்போது இது போன்ற புகார் மனுப்புகளை அனுப்பவது அவர்கள் வழக்கமாக கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். புகாரில் குறிப்பிட்டுள்ள பணிகள் தொடர்பான புகைப்பட ஆவணங்களும் பரிசீலனைக்கு இம்முறை மன்ற நடுவத்தின் முன்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அனைத்து தொடர்புடைய ஆவணங்கள், அறிக்கைகள், வாக்குமூலங்கள் அடிப்படையில் பரிசீலித்ததில் முறையீட்டு மனுதாரரது புகார்கள் நிரூபணமற்றதாக கருதி தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

மேலும், மனுதாரரால் நகராட்சி சாலை எப்போதிலிருந்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இது வரை எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்கள் போன்ற விவரங்கள் சமர்ப்பிக்கப்படாதது கண்டனத்துக்குரியது என்பதை இம்முறை மன்ற நடுவம் பதிவு செய்கிறது. எனவே சட்ட விதிகளின்படி மேற்குறிப்பிட்டவாறான ஆக்கிரமிப்புகள், ஏதுமிருப்பின் அதனை அகற்றிடவும், ஆக்கிரமிப்பு இட மதிப்பீடு விவரங்கள் மற்றும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமைக்கான காரணங்கள் அடங்கிய விரிவான விளக்க அறிக்கையினை மேட்டூர் நகராட்சி ஆணையர், சேலம் மண்டல நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மூலமாக இம்முறை மன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்திட வேண்டுமெனவும் வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒம்/

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1.திரு.S.M.H. அப்துல் சலாம்,
5/16 A, சர்ச் எதிர்புறம்,
சேலம் கேம்ப்,
மேட்டூர் அணை – 636 456.

2.நகராட்சி ஆணையர்,
மேட்டூர் நகராட்சி,
மேட்டூர் கேம்ப்,
சேலம் மாவட்டம் - 636 456.

3.திருமதி . பிரேமா,
உதவி பொறியாளர்,
மேட்டூர் நகராட்சி.
சேலம் மாவட்டம் - 636 456.

4.திரு. ஷாதிக் அலி,
நகராட்சி உதவி பொறியாளர்,
கரூர் நகராட்சி,
கரூர் மாவட்டம்.

5.நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
சேலம் மண்டலம்,
அரிசிபாளையம்,
சேலம் - 639 009.